بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *12/06/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## மாநபி (ஸல்) அவர்களின் மாபெரும் முன்மாதிரியான வள்ளல் தன்மையின் ஒளியில் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய நல்லொழுக்கங்கள் குறித்த உள்ளங்கவர் குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۵ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ اَمْوَالَهُمْ بِالَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ اَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ ۚ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿۲۷۵﴾

وَفِيْۤ اَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّآئِلِ وَالْمَحْرُوْمِ ﴿۲۰﴾

நான் ஓதிய முதல் வசனம், சூரா அல்பகராவின் வசனமாகும்.

இதன் பொருள்: எந்த மக்கள் தங்களுடைய செல்வங்களை இரவும், பகலும், மறைவாகவும் வெளிப்படையாகவும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடம் அவர்களுக்கான வெகுமதி பாதுகாப்பாக உள்ளது. அவர்களுக்கு எந்த அச்சமும் இருக்காது; அவர்கள் துயரமடையவும் மாட்டார்கள் {2:275}.

இரண்டாவது வசனம், சூரா அஸ் ஸாரியாத்தின் வசனமாகும்.

அதில் அல்லாஹ் கூறுகிறான்: மேலும், அவர்களுடைய செல்வங்களில் கேட்பவருக்கும், கேட்க இயலாதவர்களுக்கும் பங்கு இருந்தது {51:20}.

**இன்று நான் மாநபி (ஸல்) அவர்களின் கொடை மற்றும் வள்ளல் தன்மையின் முன்மாதிரி தொடர்பாக சில அறிவிப்புகளை எடுத்துரைப்பேன்.** பெருமானார் (ஸல்) அவர்களின் சொந்த அமல் என்னவாக இருந்தது என்பதும், பெருமானார் (ஸல்) அவர்கள் இது குறித்து எவ்வாறு மீண்டும் மீண்டும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு கவனமூட்டினார்கள் என்பதும் இந்த அறிவிப்புகளிலிருந்து தெரியவருகிறது. திருக்குர்ஆனில் அல்லாஹ் தேவை உடையோரின் தேவைகளை முழுமைப்படுத்துவதன் பக்கம் அதிகம் கவனமூட்டியுள்ளான். ஹுஸூர் (ஸல்) அவர்களும் இதன் பக்கம் தம்முடைய வழிகாட்டல்கள் மூலமாக மட்டுமே அல்லாமல், அதற்கும் மேற்பட்டு, தமது செயல் முன்மாதிரியைக் கொண்டும் அதிகம் கவனமூட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- **ஹஸ்ரத் நபி ஸல்) அவர்கள் இந்த துஆ சொற்களைக் கூறி துஆ செய்து வந்தார்கள்:**

اَللّٰهُمَّ إِنِّى أَعُوذُ بِكَ مِنَ الْبُخْلِ وَالْكَسَلِ، وَأَرْذَلِ الْعُمُرِ وَعَذَابِ الْقَبْرِ، وَفِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ

அல்லாஹ்வே! கருமித்தனத்திலிருந்தும், சோம்பேறித்தனத்திலிருந்தும், மிக மோசமான வாழ்நாளிலிருந்தும், கப்ர் தண்டனையிலிருந்தும், வாழ்வு மற்றும் மரணத்தின் குழப்பங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

இவ்வாறே ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களே அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்:- **ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவையும் செய்து வந்தார்கள்:**

اَللّٰهُمَّ إِنِّى أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ، وَالْعِجْزِ وَالْكَسَلِ، وَالْجُبْنِ وَالْبُخْلِ، وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ

அல்லாஹ்வே! கவலை மற்றும் துயரத்திலிருந்தும், இயலாமை மற்றும் சோம்பலிலிருந்தும், கோழைத்தனம் மற்றும் கருமித்தனத்திலிருந்தும், கடன் சுமை அதிகரிப்பதிலிருந்தும், மனிதர்கள் (என்னை) மேலோங்குவதிலிருந்தும் (ஒடுக்குவதிலிருந்தும்) நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தல் தொடர்பாக, ஹுஸூர் (ஸல்) அவர்கள் இந்த அறிவுரையைக் கூறினார்கள்:** (பணப்)பையின் வாயை மூடி வைக்காதீர்கள். இல்லையென்றால், உங்களுக்கு (வழங்கப்படுவதும்) தடுக்கப்படும்....... எண்ணிக் கொண்டு இருக்காதீர்கள். இல்லையென்றால், அல்லாஹ்வும் எண்ணி எண்ணி வழங்குவான்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** வள்ளல் அல்லாஹ்வுக்கு அருகில் இருக்கிறார். சொர்க்கத்துக்கு அருகில் இருக்கிறார். மக்களுக்கு அருகில் இருக்கிறார். நெருப்பிலிருந்து விலகியிருக்கிறார். ஆனால், கருமியோ அல்லாஹ்விடமிருந்தும், சொர்க்கத்திடமிருந்தும், மக்களிடமிருந்தும் விலகி இருக்கிறான். ஆனால், நெருப்புக்கு அருகில் இருக்கிறான்..... ஏமாற்றுக்காரன், கருமி மற்றும் செய்ததை சொல்லிக் காட்டுபவன் ஆகியோர் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள்..... நம்பிக்கை கொண்டவர் எளிய இயல்புடையவரும், வள்ளலும் ஆவார். ஆனால், தீயவன் ஏமாற்றுபவனும், கீழ்த்தரமானவனும் ஆவான்.

**ஒரு தருணத்தில் அறிவுரை வழங்கியவாறு மாநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** ஆதமின் மகனே! நீ உனது தேவைக்கு அதிகமாக (உள்ள) செல்வத்தை (இறைவழியில்) செலவு செய்வது, உனக்குச் சிறந்ததாகும். நீ அதைத் தடுத்து வைப்பது உனக்கு மோசமானதாகும். தேவையான அளவுக்கு வைத்துக் கொள்வதனால் பழித்துரைக்கப்பட மாட்டாது. யாரைப் பராமரிப்பது உனது பொறுப்பில் இருக்கிறதோ அவரிடமிருந்து நீ துவங்கு. மேலே இருக்கும் கை கீழே இருக்கும் கையை விடச் சிறந்ததாகும்.

ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம் வருகை தந்தார்கள். அவர்களிடம் ஒரு பேரீத்தம் பழக்குவியல் இருந்தது. அதை அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்காகவும், அன்னாருடைய விருந்தினர்களுக்காகவும் சேர்த்து வைத்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், "இந்தக் குவியல் மீது நரகத்தின் கடும் வெப்ப அலை வந்தடைவதைக் குறித்து நீர் அஞ்சவில்லையா?" எனக் கேட்டார்கள். பிறகு, மாநபி (ஸல்) அவர்கள், "பிலாலே, செலவு செய்து கொண்டே செல்வீராக. அரியணையின் இறைவன் இருக்க பஞ்சம் பட்டினிக்கு அஞ்சாதீர்" என்று கூறினார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "நானோ பகிர்ந்தளிப்பவன் மட்டுமே ஆவேன். வழங்குபவனோ அல்லாஹ் ஆவான்" என்று கூறினார்கள்.

**கொடை மற்றும் வள்ளல் பண்பு மாநபி (ஸல்) அவர்களிடம் நபித்துவத்துக்கு முன்பும்கூட காணப்பட்டு வந்தது.** இதற்கான சான்றை, முதல் வஹீ இறங்கியபோது, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் சான்றுபகர்ந்த அந்தக் கூற்றில் நாம் பார்க்கிறோம்.

அன்னையார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'பதற்றமடைய வேண்டியத் தேவையில்லை. இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் தங்களை ஒருபோதும் இழிவடையச் செய்ய மாட்டான். தாங்கள் உறவுகளைப் பேணுகிறீர்கள். இயலாதோரின் சுமையை சுமக்கின்றீர்கள். மறைந்து போன நன்மைகளை செய்கிறீர்கள். விருந்தோம்பல் செய்கிறீர்கள். உண்மையான இன்னல்களில் உதவி புரிகிறீர்கள்' என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** இரண்டு பழக்கங்கள் நம்பிக்கை கொண்டவரிடம் இருக்க முடியாது. ஒன்று, கருமித்தனம். மற்றொன்று, தீயொழுக்கம். அன்னார், "கருமித்தனத்திலிருந்து தப்பித்திருங்கள்....... கருமித்தனம் மற்றும் பேராசையிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நிச்சயமாக கருமித்தனம் உங்களுக்கு முன்னிருந்தோரை அழித்து விட்டது. எந்த அடியாரின் உள்ளத்திலும் பேராசை, கருமித்தனம், மற்றும் ஈமான் ஆகியவை ஒரு சேர இருக்க முடியாது" என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களில் எல்லாரையும் விட அதிகம் அழகானவராக இருந்தார்கள். மக்களில் எல்லாரையும் விடப் பெரிய வள்ளலாக இருந்தார்கள். மக்களில் எல்லாரையும் விடப் பெரிய வீரராக இருந்தார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:** அல்லாஹ் வாரி வழங்குபவர்கள் அனைவரைக் காட்டிலும் பெரிய வள்ளலாவான். நான் ஆதமின் மகன்களில் எல்லாரையும் விட அதிகம் வாரி வழங்குபவனாவேன்.

அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ரமலானில் மிக அதிகமாக வாரி வழங்கி வந்தார்கள். மேலும், நன்மை மற்றும் நற்செயல்களில், பெருமானார் (ஸல்) அவர்கள் வேகமான சூறாவளியை விடவும் அதிகம் வேகமாகி விடுவார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்:** என்னிடம் திஹாமாவின் மலைகளுக்கு சமமான தங்கம் இருந்திருந்தாலும், நான் அதை அனைத்தையும் உங்களிடேயே பகிர்ந்தளித்திருப்பேன். நீங்கள் என்னைப் பொய்யனாகவோ கருமியாகவோ காணப் பெற மாட்டீர்கள்....... என்னிடம் உஹுது மலை அளவுக்குத் தங்கம் இருந்து, மூன்று இரவு கழிந்த பிறகு, நான் கடனை அடைப்பதற்காக வைத்து விட்டதைத் தவிர, அதிலிருந்து ஒரு தீனார்கூட என்னிடம் எஞ்சியிருப்பதை நான் விரும்பவில்லை....... எவர்கள் பெரும் செல்வந்தர்களாக இருக்கிறார்களோ, தேவை உடையவர்களுக்காக செலவு செய்வதில்லையோ, அவர்கள்தான் கியாமத் நாளன்று பரம ஏழைகளாக இருப்பார்கள்.

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இரண்டு மலைகளுக்கு நடுவில் எத்தனை ஆடுகள் இருந்தனவோ அத்தனையையும் கேட்டு விட்டார். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு அவை அனைத்தையும் வழங்கி விட்டார்கள். அவர் தன் சமுதாயத்திடம் சென்று, 'என் சமுதாயத்தினரே! ஈமான் கொள்ளுங்கள். இறைவன் மீது ஆணையாக! முஹம்மத் {(ஸல்)} அவர்கள் எவ்வளவு வழங்குகிறார்கள் என்றால், ஏழ்மை பற்றிய அச்சமே அவர்களுக்கு இல்லை' என்று கூறினார். சிலவேளை யாராவது ஒரு மனிதர் உலகத்துக்காக மட்டும் இஸ்லாத்தை ஏற்றிருந்தாலும், அவருக்கு இஸ்லாம் உலகம் மற்றும் அதில் உள்ளவற்றை விடப் பிடித்தமானதாக ஆகி விடும்.

நபிநாதர் (ஸல்) அவர்கள் நாளைக்காக எந்தப் பொருளையும் மிச்சப்படுத்தி வைக்க மாட்டார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அஸ்ர் தொழுகை தொழவைத்தார்கள். பிறகு, விரைவாக வீட்டுக்குச் சென்றார்கள். பிறகு வெளியே வருகை தந்தார்கள். வினவப்பட்ட போது, அன்னார், "நான் சதக்காவின் செல்வத்திலிருந்து ஒரு துண்டு தங்கத்தை வீட்டில் விட்டு வந்திருந்தேன். அது இரவு முழுக்க என்னிடம் இருப்பதை நான் விரும்பவில்லை. எனவே, நான் அதைப் பகிர்ந்தளித்து விட்டேன்" என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். அப்பொழுது பெருமானார் (ஸல்) அவர்களுடைய முகத்தின் நிறம் மாறியிருந்தது. ஏதோ ஒரு துன்பம் அல்லது வேதனையினால் இப்படி

இருக்கும் என்று நான் நினைத்தேன். நான், 'யா ரஸூலல்லாஹ்! {(ஸல்)} தங்களுடைய முகத்தின் நிறம் மாறியிருக்கிறதே! இது ஏதாவது ஒரு துன்பத்தின் காரணமாகவா?' என பணிவுடன் வினவினேன். அதற்கு மாநபி (ஸல்) அவர்கள், "இல்லை; மாறாக, நம்மிடம் மாலையில் வந்த அந்த 7 தீனார்கள் காரணமாக இப்படி இருக்கிறது. இரவு கழிந்து விட்டது. நாம் அவற்றை செலவழிக்கவில்லை. நான் அவற்றைப் படுக்கையின் ஓரத்தில் மறந்து போயிருந்தேன். எனக்கு ஞாபகம் வந்ததும், எனக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது" என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** மாநபி (ஸல்) அவர்களின் நிலை எப்படி இருந்தது என்றால், அன்னாரிடம் என்ன இருந்தாலும் அதை அன்னார் தானமாகக் கொடுத்து விடுவார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மிகவும் வெட்கமுடையவராக இருந்தார்கள். எப்பொழுது அன்னாரிடம் ஏதாவது கேட்கப்பட்டாலும், அன்னார் வழங்கி விடுவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் வழங்குவதன் அடிப்படையில் எல்லா மக்களையும் விடப் பெரிய வள்ளலாக இருந்தார்கள்.

ஒருமுறை நபி (ஸல்) அவர்களிடம் 70,000 திர்ஹம்கள் வந்தன. இந்த செல்வம் ஒரு விரிப்பில் வைக்கப்பட்டது. மாநபி (ஸல்) அவர்கள் அதைப் விநியோகிப்பதற்காக எழுந்து நின்றார்கள். கேட்பவர் எவர் வந்த போதிலும் அன்னார் அவரை வெறுங்கையோடு திருப்பியனுப்பவில்லை. எதுவரை என்றால், அன்னார் அந்த முழு செல்வத்தையும் பகிர்ந்தளித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய நபி (ஸல்) அவர்களிடம் ஒரு திராட்சைக்குலையை அன்பளிப்பாக சமர்ப்பித்தார்கள். அது பேரீத்தங்குலையாகும் என்றும் கூறப்படுகிறது. முதலில் ஓரிடத்தில் திராட்சை என்று உள்ளது. பிறிதோரிடத்தில் பேரீத்தம் பழம் என்று உள்ளது. எவ்வாறாயினும், அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு, ஓர் இரவலர் வந்தார். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதை அவருக்கு வழங்கி விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதை அவரிடமிருந்து ஒரு திர்ஹமுக்கு வாங்கிக் கொண்டார்கள்.

அவர்கள் கொண்டு வந்திருந்த அந்தப் பழக்கொத்து, ஏதாவது சிறப்பான வகையானதாக இருந்திருக்கும். நல்ல பேரீத்தம் பழங்களாக இருந்திருக்கும். அன்னார் அந்த இரவலரிடமிருந்து ஒரு திர்ஹமுக்கு மீண்டும் அதை விலைக்கு வாங்கி நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்து விட்டார்கள். பிறகு, அந்த இரவலர் மீண்டும் வந்து விட்டார். எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அதை அவருக்கு மீண்டும் வழங்கி விட்டார்கள். இவ்வாறே இந்த நிகழ்வு மூன்று முறை நடந்தது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் விலை கொடுத்து வாங்குவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பிப்பார்கள். அவர் வந்து மீண்டும் கேட்பார். பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் அவருக்கு வழங்கி விடுவார்கள். கடைசியில், கண்ணியத்திற்குரிய நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மென்மையாக அந்த இரவலரிடம், “இன்னாரே! நீர் என்ன இரவலரா அல்லது வணிகரா? நீர் இரவல் கேட்க வந்தீர். இரவலர்களோ இப்படி ஒன்றும் செய்ய மாட்டார்கள். நீரோ திர்ஹமும் சம்பாதித்துக் கொண்டே இருக்கின்றீர். இப்படி நீர் வியாபாரம் செய்கிறீர்” என்று கூறினார்கள். மாநபி (ஸல்) அவர்கள் வழங்க மறுக்கவில்லை. ஆனால், மிகவும் நுட்பமான முறையில், “நீ செய்யும் இந்த அமல் பொருத்தமானதல்ல” என்று அறிவுரை கூறினார்கள்.

*சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சலாம் அவர்களின் அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு, மாநபி (ஸல்) அவர்கள் கடன் வாங்கி பஸரா சமுதாயத்தைப் பஞ்சத்திலிருந்து விடுதலை செய்த நிகழ்வையும், ஹஸ்ரத் ஸைது பின் சஃனா (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிகழ்வையும் எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:*

இதுதான் மாநபி (ஸல்) அவர்களின் அழகிய நல்லொழுக்கமாகும். கடன் வாங்கி ஒரு சமுதாயத்தைப் பஞ்சம், பட்டினியிலிருந்து விடுவித்தது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, தம்முடைய நல்லொழுக்கங்களால் ஒரு யூத அறிஞரையும் முஸ்லிம் ஆக்கி விட்டார்கள்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ وَّبَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ

سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهُ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا

عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ

وَالْبَغْىِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**